<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 851/2016</u>

<u>வழக்கு சாட்சி PW–17</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிவப்பெருமாள் | தொழில் | : | காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | திண்டுக்கல் | வயது | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 31st, 2025.

**(4,6,7,9 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்பு திருநெல்வேலி மாவட்டம், கடையம் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த காலத்தில் 08.05.2014ம் தேதி, அப்போது பணியில் இருந்த கடையம் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வேல்முருகன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.158/2014, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 307, 506(2) இதச–வாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்அறிக்கையை எனது விசாரணைக்கு பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே 15.00 மணியளவில் இவ்வழக்கில் சம்பவயிடமான மயிலப்பபுரம் சங்கர் என்பவரின் கடைக்கு முன்பாக சாட்சிகள் சமுத்திரம், நல்லமுத்து, தனம் ஆகியோர் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.12 ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.13** ஆகும்.

பின்னர், இவ்வழக்கின் புகார்தாரர் கபில்தேவ் மற்றும் சாட்சிகள் ஜான்ஜெபத்துரை என்ற துரை, வில்சன் ராஜ்குமார், சேகரன், பாக்கியம், அருணாச்சலம் என்ற தங்கராஜ், மாரிச்செல்வம், பிரகாஷ், கேசவன், இரத்தினசாமி, கணேசன், சமுத்திரம், நல்லமுத்து ஆகியோர்களை தனித்தினயாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எனது விசாரணையிலிருந்தும், சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரிய வந்தது. மேலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 147, 148, 294(பி), 324, 307, 506(2) இதச-விலிருந்து சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இதச- வாக மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கை மற்றும் எதிரிகளின் விபரம் குறிப்பிட்டு கனம் நீதிமன்றத்திற்கு 10.05.2014 அன்று அனுப்பி வைத்தேன். அந்த எதிரிகளின் விபரம் அடங்கிய சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.14**ஆகும்.

பின்பு, இவ்வழக்கின் எதிரிகளான சங்கர், சூர்யகலா, அசோக் ஆகியோர்களை தேடி வந்த நிலையில், 10.05.2014 அன்று 16.00 மணிக்கு மேட்டூர் இரயில்வே கேட் அருகே வைத்து எதிரிகள் சங்கர், அசோக் ஆகியோர்களை கைது செய்து காவல்நிலையம் கொண்டு வந்து சாட்சிகள் கணேசன், சேர்மக்கனி ஆகியோர்கள் முன்னிலையில் எந்தவிதமான அச்சுறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி எதிரி சங்கர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் (தாங்கள் என்னை அழைத்து சென்றால் நான்

கபில்தேவ், வில்சன்ராஜ்குமார், ஜான்ஜெபதுரை என்ற துரையையும், மற்றவர்களையும் அடிக்க பயன்படுத்திய விறகு கம்புகளையும், எதிரி அசோக் மேற்படி நபர்களை அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பியையும் என் வீட்டில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்கிறேன்) அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.15** ஆகும்.

பின்னர், அன்றைய தினம் 18.15 மணிக்கு எதிரி சங்கர் அவரது வீட்டின் மொட்டை மாடியில் போட்டு வைத்திருந்த சுமார் 70 செமீ நீளமுள்ள இரத்தக்கறை படிந்த உருட்டுக்கம்பு ஒன்று, சுமார் 66 செமீ நீளமுள்ள இரும்புக்கம்பி ஒன்று, சுமார் 112 செமீ நீளமுள்ள கம்பு ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.16** ஆகும். சுமார் 70 செமீ நீளமுள்ள இரத்தக்கறை படிந்த உருட்டுக்கம்பு ஒன்று **அ.சா.பொ.1** ஆகும். சுமார் 66 செமீ நீளமுள்ள இரும்புக்கம்பி ஒன்று **அ.சா.பொ.2** ஆகும். , சுமார் 112 செமீ நீளமுள்ள கம்பு ஒன்று **அ.சா.பொ.3** ஆகும்.

பின்பு, வழக்கின் சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.17** ஆகும். பின்பு, 09.05.2014 அன்று சாட்சி வெங்கிடாம்பட்டி கிராமம், வருவாய் அலுவலர் திரு.பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன.

பின்பு, 16.07.2014ம் தேதி, இவ்வழக்கில் காயம்பட்ட 3 நபர்களுக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர். மூர்த்திராஜ்

அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றுகள் பெற்றேன். இவ்வழக்கில் எதிரி சூர்யகலா என்பவர் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து, 16.07.2014 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

சாட்சி திண்டுக்கல் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திரு.T.ரமேஷ், அசிஸ்டெண்ட் புரோகிராமர், முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் க்ளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 18:40:02 +0530